1995 மார்ச் 30]

(அ) ஆம், 18 வீடுகள் உள்ளன.

(ஆ) இராதாபுரம் கிராமத்தில் கிராமப்புற வீட்டு வசதி சங்கத்தின் மூலம் 18 ஆதிதிராவிடர்களுக்கு வீடுகட்ட வட்டியில்லாக் கடனாக ரூ.2000, அரசு மான்யம் ரூ.1000/- கொடுத்து இதில் சொந்தமாக ரூ.2000/- செலுத்தி பயனீட்டாளர்கள் தங்களுடைய சொந்த ஏற்பாட்டில் வீடு கட்ட வேண்டுமென அறிவிக்கப்பட்டது. இதில் 16 உறுப்பினர்களால் நிலைமட்டம் வரையும், 2 உறுப்பினர்களால் அடி மட்டம் வரையும் கட்டி முடிக்கப்பட்டன. மேலும் தலா ரூ.1500/- கடன் வழங்க தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் முன் வந்தபோது பயனீட்டாளர்கள் முன்வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்.

அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை மீண்டும் எழுப்புதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த................ (குறுக்கீடு)

திரு.ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி பற்றிப் பேச வாய்ப்புக் கேட்டிருந்தேன்.......... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்டதற்கு நான் அனுமதி மறுத்திருக்கிறேன். இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பேச இருக்கின்றார்கள். நீங்களும் பேச இருக்கிறீர்கள், தம்புசாமியும் பேசவேண்டும். ஓர் உறுப்பினர்தான் எல்லாம் பேசவேண்டுமென்று நினைக்கக்கூடாது. நீங்களும், பரிதி இளம்வழுதியும் இரண்டு பேருமாகச் சேர்ந்துதான் கொடுத்திருக்கிறீர்கள். அதை அவர் பேசலாமே, உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு வேண்டாம். (குறுக்கீடு) நான் மறுப்புக் கொடுத்தால் கொடுத்ததுதான். அதை நீங்கள் கேட்க முடியாது. (குறுக்கீடு) அதையெல்லாம் நீங்கள் பேசுகிறபோது பேச வேண்டும். நீங்கள் தொகுதியில் நடக்கிற பிரச்சினைகளை எல்லாம் பேசுவதற்காகத்தான் உங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுக்கிறோம். எல்லா வகையான பிரச்சினைகளையும் இங்கே வந்து 'ஜீரோ ஹவரில்' கிளப்ப முடியாது. உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறபோதே நீங்கள் அதைப் பயன்படுத்திப் பேச வேண்டும். நான்

மறுத்ததைப் பற்றி இங்கே பேசக் கூடாது என்று பல முறை சொல்லியிருக்கிறேன். பேசக் கூடாது, உட்காருங்கள். என் கவனத்திற்கு கொண்டு வந்தபோது நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) என்னுடைய அறையில் வந்து கேளுங்கள். நிறைய விளக்கம் சொல்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு.கே. கந்தசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு.கே. கந்தசாமி. திரு.கே. கந்தசாமி இருக்கையில் இல்லை.

மதுரை, காமராஜர் சாலை-இராமநாதபுரம் நெடுஞ்சாலையில் இரு புறமும் மண் மேடிட்டுள்ளதால் அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு.ஓ.எஸ். அமர்நாத் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஓ.எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மதுரை, காமராஜர் சாலை-இராமநாதபுரம் நெடுஞ்சாலையில் இருபுறமும் மண் மேடிட்டு அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்படுவதால் பொது மக்களுக்கு ஏற்படும் இன்னல் குறித்து" மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.(குறுக்கீடு).

முற்பகல் 11-10

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை மீண்டும் எழுப்புதல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, உட்காருங்கள். என்னிடத்தில் விளக்கம் கேட்க வேண்டுமென்றால் அறையிலே வந்து கேளுங்கள். இந்தமாதிரிக் கேட்பது முறையல்ல.